மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் விடுபட்டுப் போனதை திரும்பவும் அனுப்பியிருக்கிறோம். அதற்காக அவர்கள் ஒரு ஆய்வு நடத்த வேண்டி, திரும்பவும் கேட்டு இருக்கிறோம். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் அதைப் பற்றிய முழு விவரமும் இந்த அவையில் சொல்ல முடியும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக 30 முதல் 34 வரையிலுள்ள அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 2 அறிவிப்புகளைச் செய்கிறார்கள்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாகைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. வீரையன் அவர்கள் 65 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணப்படவில்லை என்றும், அவர்களை உடனடியாக காப்பாற்றுகின்ற பொறுப்பில் அரசு ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்கள் அந்தச் செய்தியைச் சொன்ன அடுத்த கணமே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடும், அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இலங்கையில் உள்ள கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தோடு தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக நானும் கொழும்போடு பல வகையிலும் தொடர்புகொண்டு அவசரமாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த 65 படகுகளும் நேற்றைய தினம் தமிழகத்திற்குப் பத்திரமாக திரும்பி வந்து விட்டன. அதிலிருந்த 300 மீனவர்களும் நல்ல பாதுகாப்போடு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களை நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சென்று வரவேற்று அவர்களுடைய குடும்பத்தாரிடத்தில் ஒப்படைத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.